[2018 மார்ச் 21

64—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

***9406—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பஞ்செட்டி கிராமத்தில் பொன்னேரி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்கு கட்டடம் கட்டும் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பொன்னேரி ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக பொன்னேரி வட்டம், பஞ்செட்டி கிராமம், கால்நடைத் துறைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டு, அது இடமாற்றத்திற்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இடமாற்றம் செய்யப்பட்ட பின், மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும், மறையாமலும், எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எங்களின் இதய தெய்வம், எங்களின் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தை சிறந்த முறையில் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும், எனக்குப் பேரவையில் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களையும் வணங்குகிறேன்.

2018 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதியில் அடங்கிய பஞ்செட்டி கிராமம், சர்வே நெ. 142, 5.3 ஏக்கர் மேய்க்கால் நிலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடங்கள் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்த நிலத்தை கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து நீதித் துறைக்கு மாற்றம் செய்யும் பணிகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். பொன்னேரியிலிருந்து திருவள்ளூருக்கு 50 கிலோ மீட்டர் தூரம் பயணித்து மக்கள் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அங்குள்ள நீதிமன்றங்கள் அனைத்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதாலும், பொது மக்கள் நலன் கருதி இந்தப் பணியை விரைந்து முடித்துத் தருமாறு மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் பொன்னேரி வட்டம், பஞ்செட்டி கிராமத்தில் இருக்கின்ற கால்நடைப் பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான இடத்தை நீதித் துறைக்கு மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், 20-3-2018 அன்று அது நீதித் துறைக்கு மாற்றப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவிலே உயர் நீதிமன்றத்திலிருந்து அதற்கான மதிப்பீடு பெறப்பட்டு, விரைந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.*

திரு. ப. பலராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலே அதைச் செய்து தருமாறு பணிவுடன் கேட்டு, அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரை பெறப்பட்டவுடனே உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குநேரி தொகுதியில் அரசு சார்பில் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். ஆனால், அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருக்கு அழைப்பு இல்லாமல் அவர்களாகவே வந்து, அவர்களாகவே அதற்குரிய ஆரம்ப விழாவை நடத்திவிட்டுச் சென்று விட்டார்கள். நாங்கள் மக்கள் பிரதிநிதியாக இருந்து கொண்டு, மக்களுக்குச் சேவை செய்கின்ற நேரத்தில், "நீங்கள் சட்டமன்ற உறுப்பினரா? அரசாங்கம் ஏன் உங்களை அழைக்கவில்லை?" என்று மக்கள் கேட்கிறார்கள். எனவே, நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இனிமேலாவது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே, இதுசம்பந்தமாக தாக்கீதை எல்லோருக்கும் அனுப்பி இருக்கிறோம்.

திரு. எச். வசந்தகுமார்: எங்களுக்கு அழைப்பிதழ் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லையென்றால், நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எச். வசந்தகுமார்: தலைவர் அவர்களே, எங்களுக்கு அழைப்பிதழ் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லையென்றால் நடவடிக்கை எடுக்கலாம்.

2018 மார்ச் 21]

திரு. எச். வசந்தகுமார்: *கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் எங்களுக்கு அங்கு மரியாதை குறைவாக இருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; அவ்வளவுதான். தயவு செய்து எங்களுக்குள்ள மரியாதையைக் கொடுங்கள் என்று உங்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு உரிய மரியாதை கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடங்கள் திறப்பது போன்ற நீதிமன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது அரசாங்கம் அல்ல. உயர் நீதிமன்றத்தினுடைய மேற்பார்வையிலே, அந்தந்த மாவட்ட நீதிபதிகள்தான் அந்த நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள். இந்தக் குறை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல; ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இருக்கின்றது. அந்த மாவட்டத்தினுடைய, உயர் நீதிமன்றத்தினுடைய பொறுப்பு நீதிபதி அல்லது அங்கு வருகின்ற நீதிபதிகள் மற்ற மாவட்ட நீதிபதிகள் அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர்களைத் தவிர்த்து, அந்தத் துறையினுடைய அமைச்சர்களைத் தவிர்த்து, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வேறு யாரையும் அவர்கள் அழைப்பதில்லை. இதைத்தான் நடைமுறையாக அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதும் சொல்லியிருக்கின்றோம்; நீங்களும் சொல்லியிருக்கின்றீர்கள். உயர் நீதிமன்றத்திற்கு இந்தக் கருத்தை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின், மக்கள் பிரதிநிதிகளின் பெயர்களை அந்த அழைப்பிதழிலே போட வேண்டும்; அவர்களை அந்த மேடையிலே அமர வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நாங்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். உங்களுடைய கோரிக்கையை கண்டிப்பாக மீண்டும் உயர் நீதிமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதை வலியுறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

65—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***19786—டாக்டர் ஆர்.டி. அரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகையார், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் இவர்களின் சிந்தனை, சொல், செயல் ஒருசேரப் பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) செயல் தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதி 2011-ல் உருவாக்கப்பட்ட தொகுதி. செய்யூர் தொகுதியில் 105 ஊராட்சிகளும், 21 வார்டுகளும், 1 பேரூராட்சியும் உள்ளது. சற்றேறக்குறைய 2,500, 2,600 மாணவ, மாணவியர், 26 அரசு மற்றும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளைத் தன்னகத்தே கொண்ட தொகுதி. இந்தத் தொகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல்